சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – ஊராட்சி உதவியாளர்கள் நிலை – 1 மற்றும் நிலை – 2 – முழுநேர ஊராட்சி எழுத்தர்களாக பணிபுரிந்த பணியாளர்கள் – 01.04.2003–க்கு முன்னர் இளநிலை உதவியாளர் நிலையில் அரசுப் பணியில் ஈர்க்கப்பட்டவர்கள் – தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த காலத்தில் 50 விழுக்காடு காலம் ஓய்வூதியக் கணக்கில் எடுத்துக் கொள்ள அனுமதியளித்தல் – ஆணைகள் வெளியிடப்பட்டது – திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ஆ.–4) துறை

அரசாணை (நிலை) எண்:77

நாள்: 12.07.2013.
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.408, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 25.08.2009
2. அரசாணை (நிலை) எண்.39, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 13.06.2011
3. மாநில தலைமைக் கணக்காயர், சென்னை, கடித எண்.ஓய்வூ.30/11/1–56(a)/ 2011 – 2012 / 194753, நாள் 19.03.2012.

******

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், வரையறுக்கப்படாத பணி (Non-Provincialised), தொகுப்பூதியம் (Consolidated Pay), மதிப்பூதியம் (Honorarium) மற்றும் தினக்கூலி (Daily Wages) அடிப்படையில் பணிபுரிந்து, நிரந்தரப் பணியில் 01.04.2003–க்கு முன்னர் ஈர்க்கப்பட்ட அனைவருக்கும் பொருந்தும் வகையில், அவர்களை நிரந்தரமாகப் பணியில் ஈர்க்கப்படுவதற்கு முன், 01.01.1961–க்குப் பின் பணிபுரிந்த வரையறுக்கப்படாத பணி (Non-Provincialised), தொகுப்பூதியம் (Consolidated Pay), மதிப்பூதியம் (Honorarium) மற்றும் தினக்கூலி (Daily Wages) அடிப்படையிலான மொத்த பணிக்காலத்தில் பாதியை, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர்களது ஓய்வூதியத்திற்குத் தகுதியான பணிக்காலத்துடன் சேர்த்து ஓய்வூதியப் பயன்களுக்கு எடுத்துக் கொள்ள அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2) மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், ஊராட்சி உதவியாளர் பணியிடத்தில் நிலை–1, நிலை–2 என இரு நிலைகளில், எந்த நிலையில் பணிபுரிந்திருந்தாலும், மேலும், முழுநேர ஊராட்சி எழுத்தராகவோ அல்லது பகுதிநேர ஊராட்சி எழுத்தராகவோ பணிபுரிந்திருந்தாலும் அவர்கள் 01.04.2003–க்கு முன்னர் இளநிலை உதவியாளர் நிலையில் அரசுப் பணியில் ஈர்க்கப்பட்டிருப்பின் அவர்களது மேற்காணும் தொகுப்பூதிய பணிக்காலத்தில்

(த.பி.பா)

50 விழுக்காடு பணிக்காலத்தினை அரசுப் பணிக்காலத்துடன் சேர்த்து ஓய்வூதிய பயன்களுக்கு எடுத்துக் கொள்ள அனுமதித்து அரசு ஆணையிட்டது.

3) மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாநிலக் கணக்காயரால் அரசாணை (நிலை) எண்.408, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 25.08.2009-ல் முழுநேரப் பணிபுரிந்திருக்க வேண்டும் என்கிற பணித்தகுதியினை நீக்கம் செய்து மேற்படி அரசாணைக்கு திருத்தம் வெளியிடப்பட்டதா என்பதனை தெளிவுப்படுத்துமாறும், அவ்வாறு தெளிவுரை பெறப்படுவதை எதிர்நோக்கி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.39, நாள் 13.06.2011-ல் வெளியிடப்பட்ட ஆணைகளின் அடிப்படையில் பெறப்பட்ட கருத்துருக்கள் திருப்பப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது.

4) மாநில தலைமைக் கணக்காயரின் கருத்துரு தொடர்பாக, அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண்.39, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை, நாள் 13.06.2011-ஐ திருத்தம் செய்து கீழ்க்கண்டவாறு புதிய அரசாணை வெளியிடப்படுகிறது.

அ) "ஊராட்சி உதவியாளர் பணியிடத்தில் நிலை-1, நிலை-2 என இரு நிலைகளில் எந்த நிலையின் கீழும் முழுநேரம் பணி புரிந்திருந்தாலும், மேலும் முழுநேர ஊராட்சி எழுத்தராகப் பணிபுரிந்து இருந்தாலும், அவர்கள் பணிமுறிவின்றி 01.04.2003க்கு முன்னர் இளநிலை உதவியாளர் நிலையில் அரசுப் பணியில் ஈர்க்கப்பட்டிருப்பின் அவர்கள் 01.01.1961-க்குப் பின் பணிபுரிந்த தொகுப்பூதியப் பணிக் காலத்தில் 50 விழுக்காடு பணிக்காலத்தினை அரசுப் பணிக்காலத்துடன் சேர்த்து ஓய்வூதியப் பயன்களுக்கு எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

ஆ) அரசாணை (நிலை) எண்.39, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 13.06.2011-ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி ஊராட்சி உதவியாளர் நிலை-1, நிலை-2 மற்றும் ஊராட்சி எழுத்தர் பதவிகளில் பகுதி நேரம் பணிபுரிந்த காலத்தினை ஓய்வூதியப் பயன்கள் பெற கணக்கில் எடுத்துக் கொள்ள இயலாது.

இ) இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் வரை ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.39, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை. நாள் 13.06.2011-ன் கீழ் பயனடைந்தோருக்கு பாதிப்பு ஏதுமின்றி ஆணை வெளியிடப்படுகிறது.

4) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.177/JS(AR)/13, dated 11.07.2013-ன் மூலம் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி.சங்கர்,
அரசு முதன்மைச்செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக)

(த.பி.பா)

இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, சென்னை–108
மாநிலத் தலைமைக் கணக்காயர், சென்னை–6/18/35
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்கு அலுவலகம், சென்னை–15.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சித்துறை, சட்டம்,
நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதித் (ஊ.வ.)துறை, சென்னை–9
நிதித் (ஓய்வூதியம்) துறை, சென்னை–9
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

சு. மாதேவன்பிள்ளை 15/7/2013
பிரிவு அலுவலர்
15/7/13